1987 ஏப்ரல் 29]

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே சட்டமன்ற உறுப்பினரையும் கலந்து ஆலோசித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். நான்தான் அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர். எந்த அதிகாரிகளும் என்னைக் கலந்து ஆலோசிக்கவில்லை என்பதே ஒரு ஆதாரமான குற்றச்சாட்டுதான். ஒருசில அதிகாரிகளால், அரசியல் தலையீட்டின் காரணமாக, அரசியல்வாதிகளின் தூண்டுதலின்பேரில் இப்படிப்பட்ட தவறு நடந்திருக்கிறது. ஆகவே இதுகுறித்து அரசு விசாரணை நடத்தினால நானே ஆதாரம் தரத் தயாராக இருக்கிறேன். அப்படி விசாரணைக்கு ஏற்பாடு செய்யும்போது அரசு என்னையும் பயன்படுத்த முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தக்க அதிகாரிகளை அனுப்பி விசாரித்து ஏதாவது தவறுகள் அங்கே நடைபெற்றிருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை தரப்படும். அதிகாரிகள் அங்கே வரும்போது உறுப்பினர் அவர்களும் இதுபற்றிச் லாம்.

(முற்பகல் 11-20)

(ஆ) திருச்சி மாவட்டம் முதுவத்தூர் மினி சிமெண்ட் ஆலை மூடப்பட்டிருத்தல்.

திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், முதுவத்தூரிலுள்ள அரசு மினி சிமெண்ட் ஆலை மூடிக் கிடப்பது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1967 ஆம் ஆண்டு தொழில் மற்றும் வணிகத் துறையிடமிருந்து, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ரூ. 23.47 இலட்சம் செலுத்தி திருச்சி மாவட்டம் முதுவத்தூரிலுள்ள

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 29

சிறிய சிமெண்ட் தொழிற்சாலையை பெற்றுக் கொண்டது. இந் நிறுவனத்தை நடத்தியதில், நஷ்டம் உட்பட டிட்கோ மேலும் ரூ. 21.83 இலட்சம் செலவழித்தது. 1968 ஆம் ஆண்டு வணிக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியும் இந்நிறுவனத்தின் செய லாக்கம் திருப்திகரமாக இல்லாததாலும் அதனை தொழில் நுட்ப ரீதியில் நிலைநிறுத்தக்கூடியதாக இல்லாததாலும், 1971 பிப்ரவரி முதல் 1974 வரை, அதன் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டது.

2. இதன்பின். 1974 ஆம் ஆண்டு இந்த தொழிற்சாலையை மைய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (Cement Research Institute of India.) பரிசாகக் கொடுக்கப்பட்டு, 1983 ஆம் ஆண்டு வரை அத்துறையால் நடத்தப்பட்டு வந்தது. எனினும் 1978 ஆம் ஆண்டிலிருந்தே இருந்து வந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் பிரச்சினையின் காரணமாகவும், மேலும் சில நடைமுறைப் பிரச் சினைகள் காரணமாகவும், மைய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம் இந்த ஆலையைத் தொடர்ந்து தன்வசம் வைத்துக்கொள்ள விரும்பாமல் தமிழக அரசுக்கே மீண்டும் மாற்றக் கோரியது.

3. அதன்பேரில், டான்செம் நிறுவனம் இச்சிறு சிமெண்ட் ஆலையை மீண்டும் (பணியாளர்கள் தவிர) 2—12—1983 அன்று ஏற்றது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அதிக திறனளவு கொண்ட பெரிய அளவிலான சிமெண்ட் மற்றும் அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளை நிறுவுவதில் தீவிர கவனம் செலுத் துவதால், இச்சிறு சிமெண்ட் ஆலையை ஏற்று இலாபகரமாக இயங்க வைக்கக்கூடிய முனைப்பு கொண்ட தனியார் தொழில் அதிபருக்கு விற்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கும் போது, மீண்டும் மைய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம் தனது ஆராய்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்வதற்காக முது வத்தூர் சிறிய சிமெண்ட் ஆலையை இரண்டாண்டு காலத்திற்கு தன்னிடம் ஒப்படைக்கும்படி கோரியுள்ளது. இது அரசின் பரி சீலனையில் உள்ளது.

திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் சற்றேறக்குறைய ரூபாய் 45.30 இலட்சங்களைச் செலவு செய்து டிட்கோ நிறுவனம் திருச்சி மாவட்டம் முதுவத்தூரிலுள்ள மினி சிமெண்ட் ஆலையை ஏற்று, தற்போது அது டான்செம் நிறுவனத்தின் பொறுப்பில் 2—12—1983 முதல் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வளவு மூலதனம் போட்டுச் செலவழித்தும், 1983-லேயிருந்து இதுவரை

1987 ஏப்ரல் 29] [திரு. கி. வெங்கடாசலம்]

இந்த ஆலையை மீண்டும் திறப்பதற்கு எடுத்த முயற்சிகள் என்ன என்பதோடு, இந்த மினி சிமெண்ட் ஆலை என்ன காரணங்களுக்காக மூடப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆலை ஏற்கெனவே பைலட் ஆலையாகத் தான் உருவாக்கப்பட்டது. அதன்பிறகு டிட்கோவினிடத்திலே கொடுக்கப்பட்டு, டிட்கோ அதை நடத்தியது. ரூ. 23.47 இலட்சம் செலவு செய்துதான் அதை எடுத்தது. அதற்கு பிறகு மீண்டும் அது இலாபகரமாக நடைபெறவில்லை என்ற காரணத்தினாலே மூடப்பட்டது. பிறகு அதை டான்செம்-னிடத்திலே தந்தோம். டான்செம் எடுத்துக் கொண்டு நடத்தலாம் என்கிறபொழுது மைய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம் ஆராய்ச்சிக்காக அந்த ஆலை தங்களுக்குத் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, இரண்டும் அரசினுடைய பரிசிலனையில் இருக்கின்றன.

திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, 6—7—1986-இல் தினசரி பத்திரிகையின் வாயிலாக இந்த மினி சிமெண்ட் பிளாண்டை விற்பதற்கு டெண்டர் கோரப்பட்டது. அது என்னவாயிற்று என்பதையும், கடந்த 1985-ல் தொழில் மானியக் கோரிக்கையில் பதில் அளிக்கிறபொழுது மாண்புமிகு தொழில்மைச்சர் திரு. இராசாராம் அவர்கள், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் பொறுப்பிலுள்ள மூதுவத்தூர் மாதிரி சிமெண்ட் ஆலையை எடுத்து நடத்த முதலமைச்சர் முடிவெடுத்துள்ளார் என்று கூறியும் அது நடைபெறாமல், மைய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்படைக்க பரிசீலனையில் உள்ளதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எப்பொழுது ஒப்படைக்கப்பட்டு மீண்டும் அந்தத் தொழிற்சாலை செயல்படத் தொடங்கும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, எடுத்து நடத்தலாம் என்றுதான் நாங்கள் கருதினோம். அந்த நேரத்திலே மைய அரசு ஆராய்ச்சி நிறுவனம் திரும்பவும் அதைக் கேட்கிறார்கள். அவர்களுக்குத் தருவதைப்பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. விரைவிலே முடிவெடுத்து, அதை நடத்துவதைப்பற்றி தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.